**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 282/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : ராமச்சந்திரன் |
| Father's Name/ Husband's Name | : சகாதேவன் |
| Village & Taluk | : மானந்தல் |
| Calling | : விவசாயம் |
| Age | : 57 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 கோவிந்தம்மாள் என்பவர் எனது பக்கத்து நிலத்துக்காரர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை கண்ணுறவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கோவிந்தம்மாள், மற்றும் ஆஜர் எதிரி இருவரும் எனது பக்கத்து நிலத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கடந்த 06.01.2017 ம் தேதி கலை 06.00 மணிக்கு அ.சா.1 அவரது நிலத்தில் உளுந்து விதைத்திருந்த நிலத்தில் ஆஜர் எதிரி அவருடைய மாட்டை ஓட்டிக்கொண்டு வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி கேட்ட அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி கையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடந்த சம்பவத்தை காவலர்கள் விசாரணையில் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 282/2018**

Deposition of Witness for PW : 4

Name (திரு/திருமதி) : முனுசாமி

Father's Name/ Husband's Name : மணிகட்டி

Village & Taluk : மானந்தல்

Calling : விவசாயம்

Age : 66

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. **தற்போது நீதிமன்றத்தில்** என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு நான் அவலூர்பேட்டைக்கு சென்றிருந்தேன். அப்போது அவலூர்பேட்டை காவலர்கள் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். எந்த வழக்கு என்று என்னிடம் கூறவில்லை. காவலர்கள் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 06.01.2017 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் நாராயணசாமி என்பவரின் வீட்டின் அருகே இருந்தேன் என்றால் இல்லை. அப்போது அ.சா.1 கோவிந்தம்மாள் என்பவரை ஆஜர் எதிரி அடித்துவிட்டதாக கூறி சம்பவ இடத்தை பார்வையிட்டு அவலூர்பேட்டை காவலர்கள் பார்வை மகச்ர மற்றும் வரைபடம் வரைந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் காவலர்கள் விசாரணையில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த ரகுவரன் என்பவரும் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.